Gospel Truth
காஸ்பெல் ட்ரூத்
உலகளாவிய திருச்சபைகளை ஊக்குவிப்பதற்கான வேதாகம விளக்கங்கள்

ISSUE - 44 International Editor : MICHAEL W. SMITH இதழ் - 44

# தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள்

நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்
எபேசி 6 : 11.
தேவனாகிய கர்த்தர் தம்முடைய பிள்ளைகளாகிய நாம் மகிமையுள்ள ஜெயமான வாழ்க்கை வாழ பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாகவும் நமக்கு அனுக்கிரகம் பாராட்டி இருக்கிறார். ஆவிக்குரிய யுத்தத்தில் அநேக ஆத்துமாக்களை எதிராளியான பிசாசானவன் தந்திரமாய் ஏமாற்றி கிரியை செய்து விடுகிறான். ஆகவேதான் இன்றும் அநேக பெயர் கிறிஸ்தவர்கள் தோல்வியிலும் பாவத்திலும் ஜீவித்து கொண்டிருக்கிறார்கள். உங்களுக்கான கிறிஸ்துவின் நற்செய்தி என்னவெனில் உங்கள் வாழ்வில் பாவங்களை மேற்கொண்டு ஜெயம் பெற்று மகிழ்ச்சியுடன் வாழும்படி தேவனாகிய கத்தார் கிருபை பாராட்டி இருக்கிறார். பொல்லாதவர்களின் வல்லமையும் எதிரியின் தந்திரத்தையும் ஜெயித்து எழும்பும் வல்லமையை பெற விரும்பும் நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொண்டால் மாத்திரமே நடைமுறை வாழ்வில் கிறிஸ்துவின் போர் சேவகர்ளாய் ஜெயம் பெற்று வாழும் அனுபவத்தை பெற முடியும். தேவன் நம்மை பாதுகாப்பாற்ற நிலையில் விட்டுவிடாமல் பிசாசின் சகல வல்லமையையும் மேற்கொண்டு முன்னோக்கி செல்லும்படியான சர்வ ஆயுதங்களையும் நமக்கு அருளியிருக்கிறார். ஒரு படையில் போர் சேவகனாய் பணிபுரியும் ஒருவர் தன் ஆயுதங்களில் ஒன்றையோ அல்லது போர்க்கவசங்களில் ஏதாவது ஒன்றை விட்டுவிட்டு போர்க்களத்திற்கு சென்றால் அவர் யுத்தம் செய்ய தயாராக இல்லை என்று தான் அர்த்தம். நாம் பாதிக்கப்படாமல் காக்கும்படியாக கொடுக்கப்படு பவைகள் இவைகளே. இதுவே ஒரு கிறிஸ்தவனுக்கு பொருந்தும் கர்த்தர் நமக்காக அருளிச் செய்து இருக்கிற யாவையும் நமக்கு வேண்டும் அப்படி செய்யும்போது மாத்திரமே
விசுவாசம் உள்ளவர்களாய் உண்மையாய் ஜெயம் எடுக்க முடியும் எபேசி 6 : 14 -17 ல் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை குறித்து கூறப்பட்டுள்ளது.

**சத்தியம் என்னும் கச்சை :** ரோம போர் சேவகர்களின் வார்க்கச்சை என்பது நேர்த்தியாய் செய்யப்பட்ட பாதுகாப்பான கவசம். பரிபூரணமான முழுமையான வேத சத்தியத்தின் மூலமாக பரலோகத்திற்கு செல்ல வழிகாட்டும் . இன்றும் வீடுகளில் ஆலயங்களிலும் கூட பிசாசானவன் பொய்யனாக தெரிவு செய்து கொண்டிருக்கிறான். தேவனுடைய பரிசுத்த வார்த்தையானது இருளிலே வெளிச்சம் தரும். எதிரியின் சூழ்ச்சியில் என்றும் நம்மை பாதுகாக்கும். சமரசம் செய்யப்பட்ட உண்மையானது பலவீனமான கிறிஸ்தவர்களை உருவாக்கி தோல்வியை சந்திக்க செய்தது. தூய்மையான சத்தியமானது பலத்தையும் வல்லமையும் தேவனுடைய பரிசுத்தவான்களுக்கு தருகிறது. ஆனால் தவறான உபதேசத்திற்கும் அழிவுக்கு எதிரான பொய்களுக்கும் எதிராக செயல்படும் ஆயுதமாய் நம் கரங்களில் தேவசத்தியம் கொடுக்கப்பட்டுள்ளது
**நீதி என்னும் மார்க்கவசம்:** இந்த உடல் கவசமானது ஒரு போர் சேவகனின் மார்பு மற்றும் இருதயத்தை பாதுகாக்க பயன்படுகிறது. நம்மில் காணப்படும் கிறிஸ்துவின் நீதி நம் ஆவிக்குரிய வாழ்வைப் பாதுகாப்பதாய் அமைகிறது. தேவபயமற்ற இந்த உலகை நம்முடைய சுய பலத்தை சாராமல் தேவனுடைய நீதியில் நிலைத்திருக்கும் போது நம்மால் பரிசுத்தமாய் வாழ முடியும். அநீதியான உலகத்தினையும் அதன் கிரியைகளினின்று தப்பிக்கும்படியாக தேவ பிள்ளைகளாகிய நாம் கிறிஸ்துவுடன் கூட சேர்ந்து முடிவெடுக்க பழக வேண்டும். கிறிஸ்துவின் போர் சேவகர்கள் நீதியை விட்டு விடாமல் இருந்தால் தான் பாவம் நம்மை நெருங்காது. ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய பரிசுத்த வழிகளில் நடந்து அவரின் அன்புக்குரிய இருதயத்தையும் மனதையும் காத்துக் கொள்ளும் போது இவ்வுலக இச்சைகளினின்று விடுதலை பெற கூடும்.
**சமாதானத்தின் சுவிசேத்திற்குரிய பாதரட்சை :** நெடுந்தூர பயணத்தின் போது நம் பாதங்களை பாதுகாத்துக் கொள்ள



**இந்த உலகில் நம்முடைய சுய பலத்தை சாராமல் தேவனுடைய நீதியில் நிலைத்திருக்கும் போது நம்மால் பரிசுத்தமாய் ஜெயமுள்ள வாழ்க்கை வாழ முடியும்.**


| தலையங்கம் | வேதபாடம் ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை | துணை கட்டுரை ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை | கேள்வி & பதில் | உங்களுக்கு தெரியுமா? ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை தேவனுக்கே மகிமை |
|---|---|---|---|---|
| 3 | 4 | 5 - 6 | 7 | 8 |

# வேதாகமம், நமக்கு போதிப்பது என்ன..... ?




**தேவனுடைய வார்த்தை**
2 தீமோ 3:16-17; 2 பேது 1:20-21; மத் 24:35

**அன்பு**
மத் 22:37-40; யோவா 14:21-23, 1 யோவா 4:7-11

**மனந்திரும்புதல்:**
அப் 3:19; 17:30; 2 கொரி 7:10

**புதுசிருஷ்டி**
யோவா 3:3-7; 2 கொரி 5:17; ரோம 6:1-4, எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**
1 யோவா 5:18; மத் 1:21 ; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**
அப் 1:8; 15:8-9; 19:2

**பரிசுத்தம்:**
லூக் 1:73-75; எபி 12:14; 1 பேது 1:15-16; தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**
லூக் 17:20-21; ரோம 14:17; யோவா 18:36.

**சபை-** அப் 2:47; எபே 4:4-6; 1 கொரி 12 :12-13; கொலோ 1:18

**ஒற்றுமை**
யோ 17 : 20-23; கலா 3:28; வெளி 18:2-4

**நியமங்கள்**
மத் 28:19-20; 26:26-30; 1 கொரி 11 :23-27; யோவா 13:14-17

**தெய்வீக சுகமளிப்பு**
லூக் 4:18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**
மத் 19:5-6; லூக் 16 :18; ரோம 7:2-3; 1 கொரி 7:10, 11

**வெளிப்புற தோற்றம்**
1 தீமோ 2:9-10; 1 கொரி 11 :14-15; உபா 22 :5

**கடைசிகாலம்**
2 பேது 3 : 7-12 ; யோவா 5 :28,29; 2 கொரி 5 :10; மத் 25 :31-46

**தொழுதுகொள்ளுதல்**
யோவா 4: 23,24; எபே 5 :19; 2 கொரி 3 :17

**சுவிசேம் அறிவித்தல்**
மாற் 16:15

பாதரட்சை உதவுகிறது .எங்கும் நடந்து திரிகிற கிறிஸ்தவர்களாய் நீங்கள் மற்றவர்களுக்கு கொண்டு செல்ல வேண்டியது சுவிசேம். இயேசு சமாதானம் தருபவர். அந்த தெய்வீக சமாதானம் உங்கள் இருதயங்களை நிரப்புவதாக. மேலும் யாவரும் சமாதானமாய் இருக்கும்படி உறவுகளில் நிலைத்திருக்கும் படியாக தேவப் பிள்ளைகள் வாழ வேண்டும். அழிவுக்கு ஏதுவான உறவுகள் உங்களை கீழே விழும்படி தள்ளிவிடும்.உறவுக்குள் குடும்பத்தினர்களுக்கும் இடையே வைராக்கியத்தையும் பகையையும் மறந்து சமாதானமாய் வாழ உங்கள் கால்களில் சமாதானத்திற்குரிய பாதரட்சையாக சுவிசேம் அணியப்பட வேண்டும்.

**விசுவாசம் என்னும் கேடகம்:** ரோம போர் சேவகர்களின் கேடகமானது நான்கு அடி உயரம். அது எதிரிகளின் அம்புகள் சரீரத்தில் பாய்ந்து விடாமல் பாதுகாப்பைத் தரும். கர்த்தரிடத்தில் நாம் கொண்டுள்ள விசுவாசம் பொல்லாங்கன் எய்யும் அக்கினி அஸ்திரங்களை எல்லாம் அவித்து போடத்தக்கது. சோதனை, பாடுகள், உபத்திரவங்கள் மத்தியில் எல்லாவிதமான கஷ்டமான சூழ்நிலையிலும் தளர்ந்து போகாமல் விசுவாசம் என்னும் கேடகத்தை உயர்த்தி பிடித்து உறுதியாய் அவரிலும் அவருடைய அன்பிலும் நிலைத்திருப்போம்




**இரட்சிப்பு என்னும் தலைச்சீரா:** யுத்தத்தில் உயிரோடு நிற்பதற்கு முக்கியமானது. ஏனெனில் இத்த வீரரின் தலை மற்றும் முகத்தை இது பாதுகாக்கிறது. இரட்சிப்பு என்பது தேவனுடைய ஈவு வரம். அவருடைய கிருபையாலும் வல்லமையாலும் மாத்திரமே ஜெயம் எடுக்க முடியும். நாம் இரட்சிக்கப்பட்டு இருப்போமானால் முழு நிச்சயத்துடன் விசுவாசத்தோடும் கர்த்தரை சார்ந்து இருப்போம். பாவமோ மாம்சீகமோ வேறு எந்த சூழ்நிலையோ நம்மை கட்டுப்படுத்தாது. தேவனுடைய கிரியையை விசுவாசிக்கிற நாம் பாதுகாக்கப்படுவோம்.

**ஆவியின் பட்டயம் :** யுத்த களத்தில் எதிரியை வீழ்த்த உபயோகிக்கப்பட வேண்டிய முக்கியமான ஆயுதும் பட்டயம். போர்ச்சேவகன் முன்னேறி செல்ல வேண்டியதால் அதற்கு தடையாய் வருகிற எதிரியை வீழ்த்தி முன்னேற வேண்டும் .அப்போதுதான் தேசத்தை சுதந்தரிக்க முடியும். அதுபோலவே பரிசுத்த ஆவியின் வல்லமையால் மட்டுமே எதிரியை ஜெயித்து முறியடித்து பரலோக ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியும். ஆவியின் பட்டயம் என்பது கர்த்தருடைய வசனமே. பரிசுத்த ஆவியை குறித்து வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இயேசு கிறிஸ்து பிசாசை ஜெயித்தது போல நாமும் சாத்தானை ஜெயிக்க பரிசுத்த ஆவியாகிய பட்டயத்தை பெற்றிருக்க வேண்டும். எதிரியின் தந்திரத்தை ஜெயிக்க வேண்டிய அனைத்து வல்லமைகளையும் பரிசுத்த ஆவியானவராலே கிறிஸ்துவை போல பரிசுத்தமாய் வாழ அருளிச் செய்து இருக்கிறார். உலக இச்சைகளாலும் தத்துவ கோட்பாடுகளாலும் அல்ல மதம் சார்ந்த அமைப்புகளின் கொள்கைகளாலும் அல்ல மாறாக கர்த்தராகிய தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக் கொள்ளுங்கள். தோல்வியுற்றோர் பின் மாற்றம் அடைந்தோர் பாவக்கட்டுகளில் இருப்போர், மாம்சத்தின் வல்லமை இவை யாவும் தேவனுடைய வல்லமையாலே முறியடிக்கப்படும். ஜெயம் பெற்றோர்களாய் வாழும் நமக்கு நம்பிக்கையும் ஆச்சரியமான ஜெயமும் உண்டு. ■


*கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம். எங்களுடைய இதழை ஆன்லைனில் படிக்க* **www.thegospeltruth.org** *என்ற இணையதள முகவரியை பார்க்கவும். உங்களது கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் தெரிந்த விசுவாசிகளுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் பல நாடுகளில் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். படங்கள் அனைத்தும் அனுமதியோடே அச்சிடப்பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் நன்கொடைகளையும் அனுப்பவேண்டிய முகவரி :–*



**ஆயர். W.S. வேதா, காஸ்பெல் ட்ருத், 2/227, சர்ச் தெரு, கோலார்பட்டி , தென் இந்தியா - 642 107**

# ஆசிரியரின் தலையங்கம்

Editorial

அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டு தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார் அப்போ 26: 18 .

தமஸ்குவுக்கு போகிற வழியில் இயேசு சவுலுக்கு தரிசனமானார். சவுல், நீர் யார் என்றான். அதற்கு இயேசு நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்றார் (அப்போ 26 : 15). பின்பு இயேசு சவுலுக்கான தேவனுடைய அழைப்பையும் திட்டத்தையும் விவரித்து சொன்னார். அதுதான், சவுல் தேவனுடைய சுவிசேத்தை ஜனங்களுக்கு போதிக்க வேண்டும் என்பது. அந்தகாரத்தில் வாழ்பவர்களையும் சாத்தானின் பிடியில் இருக்கும் ஜனங்களையும் தேவனிடத்திற்கு திரும்பும் படியாக தேவ அழைப்பு பெற்றார். அல்லேலூயா. இன்றும் இதுவே சுவிசே செய்தியாய் இருக்கிறது. பிசாசின் வல்லமை முறியடிக்கப்பட வேண்டும். பின்மாற்றம் அடைந்தவருக்கும் பாவிகளுக்கும் விடுதலையும் ஜெயமும் உண்டு.

கண்களில் ஆனந்த கண்ணீருடன் இந்த இதழுக்கான தேவ செய்தி ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்ற தலைப்பில் எழுதுகிறேன். அநேகமாயிரம் பேர் நம்பிக்கையற்ற நிலையில் பாவ வாழ்க்கையில் இருந்து வெளியே வர இயலாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுடன் விசுவாசம் அற்றுப்போய் மாம்சீகமும், பாவ அடிமைத்தனமும் அவர்களை மேற்கொண்டு விடுவதால் போராட்டத்தில் தோல்வியடைகின்றனர். பலர் இரட்சிப்பின் அனுபவத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருக்கின்றனர். இதை வாசிக்கிற நீங்கள் என்னோடு கூட சந்தோப்பட்டு களிகூருங்கள். ஏனெனில் கர்த்தராகிய தேவன் உங்களை பாவத்தினின்று மீட்டு உங்கள் வாழ்வை மாற்ற வல்லவர்.

கீழே உள்ள பாடல் வரிகள் லூயிஸ் ஜோன்ஸ் பாடியது:-

வல்லமை உண்டு இயேசுவின் இரத்தத்தினால் பாவ சுமையினின்று விடுதலை பெற்று விட்டீர்களா?
வல்லமையுண்டு உண்டு அற்புத வல்லமை, இயேசுவின் இரத்தத்தினால்
நீங்கள் தீமையை ஜெயித்தீர்களா அற்புத வல்லமை உண்டு
இயேசுவின் இரத்தத்தினால் மீண்டும் வல்லமை உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையினால் நாம் விடுதலையோடு வாழ முடியும். பாவ அடிமைத்தனத்தில் வாழ அவசியமில்லை. இந்த அனுபவத்தை எண்ணி நான் மகிழ்கிறேன். நான் ஒரு பாவி. கிருபையால் மீட்கப்பட்டேன். இந்த வரிகள் எனக்கு பொருந்தும் பாவியாக இருந்த என்னை இயேசு கை தூக்கி எடுத்தார். தேவ திட்டம் போதுமானது .நல்லது. தனி மனிதன் ஒருவன் ஜெயமாக வாழவில்லையெனில் தேவனுடைய வல்லமையை குறை கூற முடியாது. பின் மாற்றம் அடைந்து பாவத்துக்குள் செல்கிற அநேகர் தேவனுடைய பரிசுத்த ஆவியை பெறாமல் தேவனை தேட மறந்து அப்படி ஆகின்றனர்.

இன்றைக்கு கிறிஸ்தவர்களின் பெரிய தேவை இதுவே. வாழ்வை முற்றிலும் பலிபீடத்தில் ஒப்புக் கொடுப்பது போன்று பரிசுத்த ஆவியின் வல்லமையால் நிரப்பப்படும் அனுபவத்தைப் பெற வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் அபிகே வல்லமையால் தான் நாம் கிறிஸ்துவை சந்தோப்படுத்தும் அனுதின வாழ்வில் நிலைத்திருக்க முடியும். மேலும் கீழும் முன்னும் பின்னும் வாழும் ஜனங்களின் அனுபவத்தை மாற்றி அமைத்து நிலைத்திருக்க முடியும். இதை வாசிக்கிற உங்களை இந்த செய்தியின் மூலம் ஆசீர்வதிப்பாராக. ஆனால் இன்னும் அதிகமாக ஜெயம் பெற்று வாழ உங்கள் இருதயத்தை திறந்து தேவனிடத்தில் ஒப்பு கொடுக்கும்படியாக உங்களை நான் உற்சாகப்படுத்துகிறேன்.



ஆன்லைனில்
அதிகமாக தெரிந்துகொள்ள
www.thegospeltruth.org
பதிவுசெய்து வெளியீட்டு காப்பகங்களுக்குள் உள்நுழைக



# வேதபாட வழிகாட்டி

## பொருள் : ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை

**வேத வாசிப்பு :** நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 1 கொரி 15 : 57

**செய்திச் சுருக்கம் :** தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் வழியாக பாவத்தையும், உலகத்தையும் மேற்கொண்டு ஜெயம்பெற்று கர்த்தரில் நிலைத்திருக்க முடியும்

### I. பாவத்திலிருந்து விடுதலை

A. ரோமர் 6 : 1 – 2 பாவத்திலே நிலைநிற்கலாமா?

B. ரோமர் 8 : 3 நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை

C. மத் 1 : 21 இயேசு பாவங்களை நீக்கி இரட்சிப்பவர்

D. 2 கொரி 5 : 17 பழையவைகள் ஒழிந்துபோயின

E. ரோமர் 6 : 6 – 7 பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டிருக்கிறான்

### II. பாவமில்லா வாழ்வை தரும் வல்லமை

A. 1 யோ 1 : 7 சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்

B. 1 யோ 3 : 6 – 8 பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்

C. 1 யோ 5 : 18 தேவனால் பிறந்தவன்

D. ரோமர் 6 : 12 – 14 பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது

E. 1 கொரி 6 : 9 – 11 அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை

### III. பாவம் செய்யாமலிருக்க வலியுறுத்தல்

A. யோவா 8 : 11 போ, இனி பாவஞ்செய்யாதே

B. 1 கொரி 15 : 34 பாவஞ்செய்யாதிருங்கள்

C. தீத்து 2 : 11 – 12 அவபக்தியை வெறுத்து, தேவ பக்தியுள்ளவர்களாயிரு

D. 1 பேது 2 : 21 – 22 கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின்பற்றுங்கள். அவர் பாவஞ்செய்யவில்லலை

### IV. ஆவியின் வல்லமை

A. லூக் 24 : 49 உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்

B. அப் 1 : 8 பரிசுத்த ஆவி உங்களிடத்திலிருந்து வரும் போது நீங்கள் பெலனடைந்து

C. யோ 14 : 26 பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே உங்களுக்குப் போதித்து

D. சக 4 : 6 என்னுடைய ஆவியினாலே ஆகும்

### V. பழைய ஏற்பாட்டு உருவ வழிபாடு

A. யோ 8 : 36 மெய்யாகவே விடுதலையாவீர்கள்

B. 1யோ 5 : 4 – 5 நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்

C. லூக் 10 : 17 பிசாசுகளும் கீழ்படிகிறதே

D. 1 கொரி 10 : 13 சோதனையின்று தப்பித்துக்கொள்ள

E. சங் 44 : 3 என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்

F. பிலி 4 : 13 என்னை பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பலன் உண்டு

G. உபா 20 : 4 கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்

H. 1 யோ 4 : 4 உங்களிலிருக்கிறவர் பெரியவர்

I. யோ 16 : 33 நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்


**முடிவு :**

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.
– ரோமர் 8 : 37

பாவமில்லா வாழ்க்கை
வாழ முடியாதென்றால்
**போ, இனி பாவஞ் செய்யாதே**
என்று இயேசு ஏன் ஜனங்களிடம் கூறினார்?

# ஜெயமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை

நாம் பாவத்தில் நிலை நிற்கலாமா? சாத்தான் கொண்டுவரும் சோதனைகளுக்கு பயப்படலாமா? கிறிஸ்தவ வாழ்வின் அனுபவத்தில் தொடர் தோல்வியிலேயே நிலைத்து நிற்கிறீர்களா? இல்லை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம்.



**அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்**

### பாவத்திலிருந்து இரட்சிப்பு

ரோமர் 6 : 1 -2 ல் அப்போஸ்தலராகிய பவுல் கூறுகையில் ஆகையால் என்ன சொல்வோம் ? கிருபை பெருகும்படி பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. உலகம் முழுவதிலும் உள்ள கிறிஸ்தவர்களில் அநேகர், நாம் அனைவரும் சிறியதாகவோ பெரியதாகவோ பாவம் செய்கிறோம். ஆகவே அவர்கள் இயேசு கிறிஸ்து வழியாக நமக்காக ஒப்பு கொடுக்கப்பட்டதை விட்டுவிட்டு கிருபைக்கும் மன்னிப்புக்கும் இசைந்து விடுகின்றனர். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மனுக்குலத்தின் பாவத்தை கழுவி மீட்டெடுத்து ஜெயத்தை பெற்று தரும் வல்லமை உடையது என்பதை ஏற்றுக்கொள்ள தவறுகிறார்கள். அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். ரோமர் 8 : 3 நியாயப்பிரமாண நாட்களில் மனுனால் பாவம் இன்றி வாழ முடியவில்லை. அந்த மீறுதலே மனுனுக்கும் தேவனுக்கும் பிரிவினையை உண்டாக்கியது. நியாயப்பிரமாணம் செய்து நிறைவேற்றாததை முடிக்கவே இயேசு வந்தார். அவருடைய பெயரில் இரட்சிப்பு அடங்கி இருக்கிறது .அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான் (மத்1 :21).

### விடுதலை உண்டு

பாவத்தில் வாழும் ஜனங்களை விடுதலை யாக்கும் மகிமையான கிறிஸ்துவின் திட்டத்தை சில பொய்யான போதகர்களும் பொய்யான இயக்கங்களும் சரிவர போதிப்பதில்லை. உண்மையான இரட்சிப்பின் சந்தோத்தையும் நம்பிக்கையும் ஒரு மனுன் பெறாவிடாமல் தடுப்பது பிசாசும் அவனை சேர்ந்த கூட்டத்தாரும். நாம் பாவத்தை மேற்கொள்ளும் வல்லமையை பெற்று பரிசுத்தமும் நீதியுமாய் வாழ அழைக்கப்பட்டு இருப்பதால் கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். வேதம் நமக்கு தெளிவாக போதிக்கிறது. அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்று ஜெயமாக வாழ நம்மால் முடியும்.ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின 2 கொரி 5 : 17). பழைய பாவங்களான லௌகீக இச்சை, கசப்பு போன்ற மனுக்குலத்தின் பாவ அடிமைத்தனத்தின் கட்டுகளை உடைத்து விடுதலையாக்கும் வல்லமை இயேசுவுக்கு உண்டு. நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்ட தென்று அறிந்திருக்கிறோம் ரோமர் 6 : 6. பாவ அடிமைத்தனத்திலும் கட்டிலும் நின்று நீங்கி ஜெயம் பெற்று வாழ ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் தயாராக வேண்டும்.

### மறுரூபமாக்கப்பட்ட வாழ்வு

1 கொரி 6 : 9- 11 இல் பவுல் பழைய பாவங்களில் இருந்து ஒரு மனுன் கழுவி சுத்திகரிக்கப்பட்டதை விளக்குகிறார் அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. சிலர் விபச்சாரக்காரர் விக்கிரக ஆராதனைக்காரர்,திருடரும், சுய புணர்ச்சிக்காரரும் வெறியருமாய் இருந்தார்கள். உங்களில் சிலர் இப்படிப்பட்ட வர்களாக இருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினால் நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள். பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். எல்லோரும் பாவம் செய்தார்கள். ஆனால் தேவனுடைய அநுக்கிரகத்தினாலே மறுரூபமாக்கப்பட்டோம். பாவத்தின் வல்லமையை விட இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை மேலானது. உண்மையான இரட்சிப்பை அனுபவிக்காத பெயர் கிறிஸ்தவர்களின் நிலைமை பரிதாபம். இரட்சிக்கப்பட்ட ஒருவர் பாவத்தின் வல்லமையை மேற்கொள்ளும் அதிகாரத்தை உடனடியாக பெற்றுவிடுவார். அவன் தன்னால் எல்லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க சாட்சியாக வந்தான்.அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும் 1 யோவான் 1 : 7 .

### பாவம் செய்ய மாட்டான்

பாவம் செய்கிறவன் பிசாசினால் உண்டாயி ருக்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (1 யோவான் 3 : 8) வசனம் 6ல் அவரில் நிலைத்திருக்கும் எவனும் பாவம் செய்கிறதில்லை 1 யோவான் 5 : 18ல் மீண்டும் கூறுகிறார், தேவனால் பிறந்த எவனும் பாவம் செய்யான் என்று அறிந்திருக்கிறோம். பொல்லாங்கன் அவனை தொடான். இந்த சந்ததி இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தால் கழுவப்பட்டு பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுதலை ஆக்கப்பட்டது என்று அறிந்து உணர்வடையுங்கள். ஆகவே நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்கு கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது.

கிருபையின் பிரமாணம் (ரோமர் 6 : 14).என்பது நியாயப்பிரமாணத்தினின்று நம்மை விடுதலையாக்கி விட்டது.

### கர்த்தருடைய கிருபையினால் பாவம் இன்றி வாழலாம்

இறையியலாளர்கள் கூட ஜனங்கள் பாவத்திலிருந்து விடுதலைக்கப்படுவதை கடினமாக போதிக்கலாம் ஆனால் நடைமுறை வாழ்வுக்கேற்ப வேத வசனம் போதிப்பதை கவனியுங்கள். விபச்சாரத்தில் பிடிக்கப் பட்ட ஒரு ஸ்திரீயிடம் இயேசு, போ இனி பாவம் செய்யாதே என்கிறார்(யோவான் 8 : 11).இயேசு அந்த ஸ்திரீயிடம் வேறு எதையாவது செய் என்று சொல்லாமல் பாவ அடிமைத்தனத்தின் கட்டை உடைத்து பாவம் இன்றி வாழ வழி செய்தார் . இதே



காரியத்தை பவுல் 1 கொரி 15 : 34 ல் மேலும் 1 பேதுரு 2 : 21 -22 இல் அவர் பாவம் செய்யவில்லை அவருடைய அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார். ஏனெனில் எல்லா மனுருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணலாம் (தீத்து 2 : 11 - 12). இதுதான் வெற்றி உள்ள வாழ்க்கை.

**பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் ஒரு கிறிஸ்தவர் சாத்தான், மாம்சம், உலகம் இவற்றின் வல்லமையை மேற்கொண்டு கிறிஸ்துவில் மாத்திரம் என்றும் நிலைத்திருக்க முடியும்.**

### முழுமையான இரட்சிப்பு

பாவியாகிய ஒருவர் கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு மனம் திரும்பி பாவமன்னிப்பை பெற்று இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்ட அனுபவமே இரட்சிப்பு. சுத்தமாக்கப்பட்ட பாத்திரமான பின்பு நம்மை கர்த்தராகிய தேவன் பரிசுத்த ஆவியால் நிரப்ப விரும்புகிறார். இயேசு தம் சீஷர்களிடம் நீங்களோ உன்னதத்தில் இருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார் (லூக் 24 : 49). அதேபோல் அப்போ 1 : 8 கூறுகையில் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள். ஜெயமுள்ள வாழ்க்கை வாழ தேவன் நமக்கு அநுக்கிரகம் பண்ணியிருக்கிறார். பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் போதுதான் நாம் பெற்ற இரட்சிப்பு பூரணமாகிறது. பரிசுத்த ஆவியானவர் தரும் பெலனால்தான் சாத்தானின் கிரியைகளையும் மாம்சீக இச்சை, உலக ஆசை எல்லாவற்றையும் விட்டு கிறிஸ்துவுக்குள் வாழ முடியும்.என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14 : 26). ஜெயமும் பரிசுத்தமும் நிலைத்து நிற்க பலவீனத்திலே நமக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரே ஊக்கப்படுத்தி பலப்படுத்துகிறார்.

### விசுவாசிக்கிறவர்களுக்கான வாக்குத்தத்தம்

இருளான உலகத்தில் வாழும் தேவபிள்ளை களுக்கு கர்த்தருடைய ஆவியானவரின் சத்திய வசனங்களில் முழுவதுமாக வாக்குத்தத்தங்கள் அடங்கி இருக்கிறது. பாவத்திலிருந்து விடுதலை பெறுவது என்பது தற்செயலான காரியம் அல்ல. வசனம் கூறுகிறது குமாரன் விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலை ஆவீர்கள் யோவான் 8 : 36

1 யோவான் 5 : 4-5 கிறிஸ்தவ வாழ்க்கை என்பது தோல்வியுற்ற வாழ்வு அல்ல. அது ஜெயம் நிறைந்த வாழ்க்கை. ஆவிக்குரிய வல்லமை நிறைந்த வாழ்க்கை (லூக்கா 10 : 17). உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும் படியான போக்கையும் உண்டாக்குவார் (1 கொரி 10 : 13).

சில வேளைகளில் சத்துருவின் கை பெலப்பட்டு நாம் சோர்ந்து போவோம். சூழ்நிலை எப்படி இருப்பினும் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொண்ட நாம் நம்மையும் அறியாது தேவனுடைய வல்லமையினால் பெலப்பட்டு பெரிய காரியங்களை செய்யும்படியாய் பரிசுத்த ஆவியானவர் நம்மை பலப்படுத்துவார்.

நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தபடியால், உம்முடைய வலதுகரமும், உம்முடைய புயமும், உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது (சங்கீதம் 44 : 3). உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம்பண்ணவும் உங்களை இரட்சிக்கவும் உங்களோடேகூடப் போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று சொல்லவேண்டும் (உபா 20 : 4). என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற் றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு. (பிலிப்பியர் 4 : 13). நம்மை சுற்றியுள்ள சூழ்நிலைகளையோ நம் எண்ணங்களையோ ஒருபோதும் மேலாக எண்ணாமல் ஜெயம் பெற்று வாழ வேண்டும். பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை ஜெயித்தீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிற வனிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர் (1 யோவா 4 : 4). அந்தகாரத்தில் அகப்பட்டு உள்ளதால் உலகத்தில் நமக்கு போராட்டங்கள் உண்டு என்பதை இயேசு அறிந்திருக்கிறார். என்னிடத்தில் உங்களுக்கு சமாதானம் உண்டாயிருக்கும் பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு.ஆனாலும் திடன்கொள்ளுங்கள்.நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் (யோவா 16 : 33) . நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே (ரோமர் 8 : 37).

தேவனே நாங்கள் தோல்வியினால் துவண்டு போகாமல் உம்முடைய வல்லமையால் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தினால் ஜெயமுள்ள வாழ்க்கையை உம்மில் கண்டு வாழ எங்களை உயிர்ப்பித்தருளும் - ஆமென்.■

# கேள்வி ? பதில்!



### பாவம் இல்லாது வாழ்வது என்பதன் உண்மையான அர்த்தம் என்ன?

ஒரு தனிப்பட்ட மனுஷன் இரட்சிக்கப்பட்டு விட்டால் வேதம் சொல்கிறது அவர் பாவம் செய்யாமல் வாழும் வல்லமையை பெற்றுவிட்டார் என்று. தேவனால் பிறந்தவன் பாவஞ் செய்யான் (1 யோவான் 3 : 9). பாவத்தின் விளைவை குறித்து ஆலோசிக்கும் முன்பதாக பாவத்தை குறித்து உணர்ந்து கொள்வோம்.

புதிய ஏற்பாட்டில் பாவத்தை குறித்து நான்கு முக்கிய வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளது. தேவனுக்கும் மனுஷனுக்கும் இடையான ஐக்கியத்தை தடுக்கிறது. உண்மையான தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற ஒவ்வொருவரும் பின்வரும் சத்திய வசனங்களை மீறாதபடி நடந்து கொள்ள வேண்டும்.

அநீதியெல்லாம் பாவந்தான் – (1 யோ 5 : 17).

நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் – (1 யோ 3 : 4).

ஆதலால், ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும் – (யாக் 4 : 17).

விசுவாசத்தினால் வராத யாவும் பாவமே – (ரோமர் 14 : 23).

இன்னும் தெளிவாக மோசேயின் நியாயப்பிரமாணமானது இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப் படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது (கலாத்தியர் 3 : 24). நியாயப்பிரமாணத்தின் கீழ் வாழ்ந்த ஜனங்களால் பாவம் இன்றி வாழவும் ஜெயம் எடுக்கவும் முடியவில்லை. தாவீதை கவனித்து பாருங்கள். அவர் பத்சேபாளிடத்தில் பாவத்திற்கு உட்பட்டார். ஆபிரகாம் பொய் பேசினார். அவர்களுடைய இருதயம் தேவனுக்கு சேவை செய்தது. ஆனால் பாவத்தை ஜெயிக்கும் வல்லமை அவர்களுக்கு இல்லை. ஆகையால் அவர்கள் நியாயப்பிரமாணத்தின்படி மீறுதலுக்குட்படும் பொழுது பலியிட்டு தேவனிடத்தில் மன்னிப்பு பெற்று ஒப்புரவானார்கள். புதிய உடன்படிக்கையின் படி இயேசுவின் இரத்தத்தின் வல்லமையினால் மன்னிப்பு அருளிச் செய்யப்படுவதோடு மாத்திரமல்ல போ இனி பாவம் செய்யாதே என்று கூறப்பட்டுள்ளது இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை (ரோமர் 3 : 20).

புதிய ஏற்பாட்டில் தேவனுக்கும் அவருடைய வழிகளுக்கும் விரோதமாக கலகம் பண்ணும் விதமாய் இருதயத்தில் இருந்து தோன்றும் பாவங்கள், கிறிஸ்துவின் மூலமாக நியாயப்பிரமாணத்தை மீறாமல் வாழ வழி செய்கிறது. பவுலும் யோவானும் யார் பரலோக ராஜ்ஜியத்தில் பிரவேசிப்பதில்லை என்று கூறுகிறார்கள்; விபச்சாரக்காரர், விக்கிரக ஆராதனைக்காரர், பொய்யர், திருடர், வெறியர் . இப்படிப்பட்டவர்களை குறிப்பிடுகிறார்கள். இந்த மீறுதல்கள் தேவனிடத்தில் இருந்து நம்மை பிரிக்கிறது. இவைகளே பாவங்கள்.

### பாவத்திலிருந்து விடுதலை பற்றி ஜெயமுள்ள வாழ்க்கை வாழ்வோம் எனில் மீண்டும் நாம் தவறாமல் அல்லது வழுவிப் போகாமல் இருக்க கூடுமா?

நமது தலைப்பிற்கு மிகவும் நெருக்கமான ஒரு கேள்வி இது. இதுவரையிலும் அப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவரை நான் காணவில்லை. ஏனெனில் கிறிஸ்தவர்கள் எல்லாவற்றையும் விட கிறிஸ்துவை அதிகமாக நேசிப்பார்கள். அவர்களுடைய நோக்கமும் எண்ணமும் கிறிஸ்துவை மையமாக கொண்டதாகவே இருக்கும். மனுஷீகத்திலே நாம் மிகச் சரியானவர்களாக இருக்க முடியாது என்பது இல்லை. தேவனிடத்தில் இருந்து நம்மை பிரிக்கும் பாவங்களை நாம் செய்யக்கூடாது. ஆனால் எல்லா ஆவிக்குரிய காரியங்களிலும் நம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் வளர வேண்டும் என்று சொல்லுகிறோம் ஆனால் சில குறைகள் இருக்கிறது என்று தானே அர்த்தம்.

உதாரணமாக ஒரு கஷ்டமான பதட்டமான சூழ்நிலையில் ஒரு கிறிஸ்தவர் மிகுந்த மகிழ்ச்சியோடு அல்லது பொறுமையோடு செயல்படக்கூடாது. அது நம் தோல்வியை அல்லது தவறை காண்பிக்கிறது. இது மாதிரியான சூழ்நிலைகளை கையாள வேண்டுமானால் கர்த்தருக்குள் இன்னும் வளர வேண்டும். கிறிஸ்தவர்கள் தோல்வியினால் அடையாளப்படுத்தப்பட கூடாது. மாறாக வெற்றியுள்ள வாழ்க்கையே அவர்களது அடையாளமாக இருக்க வேண்டும். தோல்வியடையும் போது அதை சரிப்படுத்தி ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறி செல்ல வேண்டும்.

2 பேதுரு 3 : 18 ல் இயேசு கிறிஸ்துவின் கிருபையில் வளருங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. 2 பேதுரு 1 : 5 ல் உங்கள் விசுவாசத்தோடு தைரியத்தையும் ஞானத்தையும் கூட்டி வழங்குங்கள் என்று சொல்லப்பட்டுள்ளதால் கிறிஸ்தவ வாழ்வின் அனுபவத்தில் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து கிறிஸ்துவை போல வாழ முயற்சிக்க வேண்டும். சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும் பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டும் (எபேசி 4 : 12) தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளருகிறவர் களாயிருக்கும்படி அப்படிச் செய்தார்.

கானானியர்களோடு இஸ்ரவேலர்கள் பல சமயங்களில் யுத்தம் செய்ய நேரிட்டது. அவர்கள் கர்த்தருக்கானவர்கள் ஆகவே மிகப்பெரும் ஜெயம் பெற்றார்கள். இன்றும் மிகப்பெரும் சுவர்களைக் கொண்ட மகாதேசங்கள் இந்த பூமியில் உண்டு. வல்லமை உள்ள தேவனுக்கு கீழ்ப்படிந்து வாழும் தேசத்திற்கே ஜெயம் உண்டாகும்.

Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide Indian Constitution Act 25th & 19(1) Section

TAMIL EDITION - FOR PRIVATE CIRCULATION ONLY

உங்களுக்குத் தெரியுமா?

ப்ரோப் மினிஸ்ட்ரீஸ் என்று சொல்லக்கூடிய ஆராய்ச்சி ஊழியங்களின் மூலம் வெளியிடப்பட்ட ஒரு தகவல் 2020 ஆம் ஆண்டு சுமார் 3,106 அமெரிக்கர்களில் 18 முதல் 55 வயதானவர்களிடம் எடுக்கப்பட்ட ஆய்வு.

- 60% அதிகமானவர் இளம் கிறிஸ்தவர்கள் 18 முதல் 39 இயேசு, புத்தர், முகமது ஆகியோர் இரட்சிப்பின் வழியில் சமமானவர்களே என்கின்றனர்.
- 30% புராடெஸ்டென்ட் எதிர்பாளர்கள் இயேசு பூமியில் வாழ்ந்த போது பாவம் செய்யவில்லை என்று நிச்சயம் அற்றவர்கள்.
- 80% அதிகமான இளம் வாலிப கத்தோலிக்கர்களும் இயேசு பூமியில் பாவமற்ற பரிசுத்த வாழ்வு வாழ்ந்தார் என்பதை ஏற்றுக் கொள்ளாதோர் ஆவர், என்னே பரிதாபமான ஆய்வு.

ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## அலைவுபட்ட விசுவாசம்

உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார் (மத்தேயு 14 : 31).

படவு நடுக்கடலிலே அலைகளினால் அலைவுப்பட்டது இரவின் நாலாம் ஜாமத்தில் இயேசு கடலின் மேல் நடந்து அவர்களிடத்திற்கு வந்தார் சீர்கள் அவரை கண்டு பயந்து ஆவேசம் என்று அலறினார்கள். இயேசு அவர்களுக்கு பிரதியுத்தரமாக திடன் கொள்ளுங்கள் நான் தான் பயப்படாதீர்கள் என்றார் (மத் 14 : 27) . அற்புதர் இயேசுவின் குரலை துன்ப வேளையில் கேட்டது எவ்வளவு பாக்கியம். அவருடைய சத்தமும் பிரசன்னமும் புயல் போன்ற பிரச்சனைகளை ஊடுருவிச் சென்று விடும்.



பேதுரு அவரை நோக்கி ஆண்டவரே நீரேயானால் நான் ஜலத்தின் மேல் நடந்து உம்மிடத்தில் வர கட்டளையிடும் என்றார். அதற்கு இயேசு வா என்றார் கடலின் நடுவிலே பேதுரு படகை விட்டிறங்கி நடந்து வந்தார் என்ன ஒரு ஆழமான விசுவாசம் நம்பிக்கையும். பேதுரு இயேசுவை நோக்கி நடந்து வந்தார். மாம்சீகத்திலே கிறிஸ்துவை நோக்கி சென்ற பேதுருவின் ஜெயம் அது. பேதுரு தேவனுடைய வல்லமையினால் தண்ணீரில் இயற்கையான குணத்தை மேற்கொண்டு ஜெயித்துவிட்டார்.. தேவனுடைய வல்லமையால் பரிசுத்த வாழ்க்கை வாழ இரட்சிப்பு நமக்கு வழிவகுக்கும்.

பேதுரு ஜலத்தின் மேல் நடந்த அதே வேளையில் பெருங்காற்றின் வேகத்தையும் சுற்றி பார்த்தார் அலைவுப்பட்ட விசுவாசம் ஒரு நிமித்தில் தள்ளாட செய்தது மூழ்கத் தொடங்கினார். அதினின்று வெளியே வருவதற்குள் சத்தமிட்டு ஆண்டவரே என்று கதறினார். உடனே இயேசு கையை நீட்டி அவரை பிடித்து தூக்கினார். மீண்டும் அவர்கள் படவில் ஏறின உடனே புயல் நிறுத்தப்பட்டது.

ஜெயம் அதிசயமானது பாவ உலகத்தை மேற்கொண்டு ஜெயிக்கும் ஆச்சரியமான வல்லமையை அறியுங்கள். எப்படியிருப்பினும் சோதனைகள், பாடுகள் மத்தியில் துவண்டு போய்விட்டால் நம் விசுவாசம் தளர்ந்து போய்விடும்.

இயேசுவின் மேல் உறுதியாய் நம் கண்கள் பார்த்துக் கொண்டிருந்தால் விசுவாசம் உறுதியாக நிலைத்துக் கொண்டிருக்கும். நம் அன்பான கர்த்தர் நம் அழுகையின் சத்தத்தை கேட்டு மனமிரங்கி உலகத்தின் பயங்கரத்தினின்று மேற்கொண்டு ஜெயிக்க பலப்படுத்துவார். தேவன் தம்முடைய கரத்தை நீட்டி துவண்டு போன விசுவாசத்தை மாற்றி பலப்படுத்துவார். நம் உடன் இருக்கும் சகோதர சகோதரிகளே கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தில் நாம் பலப்பட செய்வோமா? ■

CONTACT :-

**The Editor,**
**Gospel Truth,**
**P.O. Box - 54**
**Pollachi Town**
**INDIA - 642 001.**

Email :
vedhacog1954@gmail.com

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

THE CHURCH OF GOD *Worship Place:*

**Church Street, Kolarpatti, Pollachi - 642 107**

**தேவசபை** ஆராதனை நடைபெறும் இடம் :

**சர்ச் தெரு, கோலார்பட்டி, பொள்ளாச்சி - 642 107**

**SUNDAY SERVICE : 10 AM - ஞாயிறு ஆராதனை : காலை 10 மணி**

எந்த சபைக்கும் போகாதவர்கள் எங்களுடன் பரிசுத்த ஆராதனையில் கலந்துகொள்ள அழைக்கின்றோம்.

Come & Worship with Real Truth

Tamil Editor : W.S.VEDHA, THE CHURCH OF GOD, 2/227 CHURCH STREET,-KOLARPATTI & P.O, SOUTH INDIA - 642 107. Cell : 95975 62641.

Team : V.Selvam, V.Jayanathan Gnanarajan, V.J.Sam kirubaharan

Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316